www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: 2 4 1 9

நேரம்: 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

14×1=14

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

1) ''எங்கள் தந்தையா நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தந்தை வழிச் சமூக முறை ஆ) தனிக்குடும்ப முறை

இ) விரிந்த குடும்ப முறை ஈ) தாய்வழிச் சமூக முறை

2) கடலின் பெரியது

அ) பயன் ஆராயாமல் ஒருவா செய்த உதவி

ஆ) உற்ற காலத்தில் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

ஈ) செய்யாமல் செய்த உதவி

3) உலக சுற்றுச்சூழல் நாள்

அ) ஜூன் 5 ஆ) ஏப்ரல் 22 இ) அக்டோபா 10 ஈ) டிசம்பா 1

4) 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடாபுடைய சொல்?

அ) வேளாண்மை ஆ) புவியியல் இ) கணிதம் ஈ) இலக்கியம்

5) பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) தமிழ் அழகியல் | - | 1. பரலி. சு. நெல்லையப்பா |
| ஆ) நிலவுப்பூ | - | 2. தி.சு. நடராஜன் |
| இ) கிடை | - | 3. சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | - | 4. கி. ராஜநாராயணன் |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

6) தமிழில் திணைப்பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) எழுத்துக்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) பொருட்குறிப்பு ஈ) தொடாக்குறிப்பு

7) தோப்பில் முகமது மீரானின் புதினங்களுள் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்ற படைப்பு

அ) துறைமுகம் ஆ) கூனன் தோப்பு

இ) சாய்வு நாற்காலி ஈ) ஒரு கடலோரக் கிராமத்தின் கதை

8) ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு

அ) 1816 ஆ) 1812 இ) 1815 ஈ) 1824

9) தண்டியலங்காரம் ............ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.

அ) சூரியநிழல் ஆ) வீரசோழியம் இ) காவியதாசம் ஈ) முத்துவீரியம்

10) 'வியாவை வெள்ளம்' என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) உம்மைத்தொகை ஆ) உருவகம்

இ) உவமைத்தொகை ஈ) தொழிற்பெயா

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிா் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீாநிலைகள்

12) கவிஞா சி.மணி அவாகள் தனது கவிதையில் மிகுதியாகப் பயன்படுத்திய உத்தி

அ) அங்கதம் ஆ) படிமம் இ) குறியீடு ஈ) உவமை

13) இராமன் தனது ஏழாவது உடன்பிறந்தவன் என யாரை நோக்கிக் கூறினாா்?

அ) குகன் ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ) பரதன்

14) தமிழ்நாட்டில் பெருக வேண்டியனவாக பாரதி கூறுவது

அ) நவீன கலைகள் ஆ) பள்ளிக்கூடங்கள்
இ) விண்வெளி நூல்கள் ஈ) எதுவுமில்லை

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×2=6**

15) வசனம், கவிதை வேறுபாடு தருக.
16) மறக்கக்கூடாதது, மறக்கக்கூடியது எவற்றை?
17) கவிஞா சிற்பி எவற்றை வியந்துபாட, தமிழின் துணை வேண்டும் என்கிறாா்?
18) அகநானூற்றின் மூன்று பிரிவுகள் யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

19) கீழ்த்திசை சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20) பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?
21) அக்காலக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: **7×2=14**

22) சொற்களை ஏற்ற இடத்தில் நிரப்புக:

வேற்றுயிரால் ............. விளையாதிருப்பதற்(கு) ஏற்ற வண்ணம் ............. இயற்றாமல் - ஆற்றலும் ............. இனம் வருந்தப் பேரிடாசெய் கின்றாயே நண்பா! ............. நவில்?

(தொல்லை, காவல், பெண்பால், சரியோ)

23) கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சோத்தும் இருவேறு தொடாகளை அமைக்க:

(அ) முன் < அல்லது (ஆ) தானே <

24) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:

தலை, தளை, தழை

25) உவமைத் தொடாகளைச் சொற்றொடாகளில் அமைத்து எழுதுக:

அ) கிணற்றுத் தவளை போல

(அல்லது)

ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26) கலைச்சொல்லாக்கம் தருக:
i) Check out
ii) Mini meals

27) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீது தான்; அவாகள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிாகொண்டுத் தீாப்பாாகள்.

28) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:
அ) தந்தனன் ஆ) வந்து

29) ஏதேனும் ஒன்றனுக்குப் புணாச்சி விதி தருக:
அ) உள்ளொன்று ஆ) ஒருமையுடன்

30) ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

31) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோா உறவு வேண்டுமெனக் கேட்கிறாா?

32) ''மூன்றான காலம்போல் ஒன்று'' - எவை? ஏன்? விளக்குக.

33) ''வருபவா எவராயினும் நன்றி செலுத்து'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) 'கூதிாப் பாசறை' துறைக்குச் சான்று தந்து விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

35) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

36) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

37) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடாச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்குக.

38) இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை பற்றி நீவிா அறிந்தனவற்றை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×4=12**

39) பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40) இலக்கிய நயம் பாராட்டுக: (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

உடலின் உறுதி உடையவரே
உலகின் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?
சுத்தமுள்ள இட மெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

- கவிமணி

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:
அ) முயற்சி திருவினையாக்கும்
(அல்லது)
ஆ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

42) தமிழாக்கம் தருக:
i) A young calf knows not fear.
ii) Birds of the same feather flock together.
iii) Charity begins at home.
iv) Knowledge of language is the doorway to wisdom.

43) அ) தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை? (அல்லது)
ஆ) வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: **3×6=18**

44) அ) சென்னையில் உள்ள மயிலாப்பூா, கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?
(அல்லது)
ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45) அ) 'நெகிழி தவிா்த்து நிலத்தை நிமிா்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆா்வலருடன் நடத்திய கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

46) அ) 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? (அல்லது)
ஆ) பொறுப்புணா்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணா்வால் மாற்றிய மருதனின் பண்புநலன்களை விவரி.

## பகுதி - V

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**
அ) 'குகனோடும் ...........' எனத் தொடங்கும் கம்பராமாயணம்.
ஆ) 'அரிது' என முடியும் குறள்.

.............

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com